பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

18 10 2025 SATURDAY 6.30 PM

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. பாதுகாப்பு தொழில்நுட்பத்தில் உலகின் நம்பிக்கை மிகுந்த நாடாக இந்தியா திகழ்கிறது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.
2. மூச்சுத்திணறல், புற்றுநோய் மற்றும் நீரிழிவை கட்டுப்படுத்த Nafithromycin என்ற புதிய மருந்தை இந்திய விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.
3. வடகிழக்கு பருவமழை காலத்தில் மின் விநியோகத்தை சீராக பராமரிப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு சிவசங்கர் கூறியுள்ளார்.
4. நாகை மாவட்டத்தில் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யும் பணியை மாநில அரசு போர்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.
5. ஆசிய படகு சாம்பியன் போட்டியில் இந்தியா 2 தங்கம், 2 வெள்ளிப் பதக்கங்களை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ----

<<<<<<>>>>

பிரம்மோஸ் ஏவுகணை உற்பத்தியில் அடைந்துள்ள சாதனை உற்பத்திக்கான இந்தியா இயக்கத்தை உலக அளவில் விரிவுபடுத்தியிருப்பதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோவில் இன்று பிரம்மோஸ் ஏவுகணை தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட ஏவுகணைகளின் முதல் தொகுப்பை ராணுவ பயன்பாட்டிற்கு அர்ப்பணித்து வைத்து பேசிய அவர், நீண்டகாலமாக பயன்படுத்தப்பட்டுவரும் இந்த ஏவுகணைகள் தொழில்நுட்ப ரீதியாக, திறன்மிக்கவை என்று கூறினார்.

தொலைதூரத்தில் உள்ள இலக்கை துல்லியமாக விரைந்து சென்று தாக்கும் திறன் பிரம்மோஸ் ஏவுகணைகளுக்கு உள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

பாதுகாப்பு தொழில்நுட்பத்தில் உலகின் நம்பிக்கைமிகுந்த நாடாக இந்தியா திகழ்கிறது என்றும் திரு ராஜ்நாத் சிங் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>

மூச்சுத்திணறலை சரிசெய்யும் *Nafithromycin* என்ற புதிய மருந்தை இந்திய விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளதாக அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று மருத்துவ பயிலரங்கு ஒன்றை தொடங்கிவைத்து பேசிய அமைச்சர், மூச்சுத்திணறல் பாதிப்பை சரிசெய்வதோடு மட்டுமின்றி, புற்றுநோய் சிகிச்சை மற்றும் நீரிழிவு நோயை கட்டுப்படுத்தும் வகையில் *Nafithromycin* என்ற எதிர் உயிரி மருந்து செயல்படும் என்றும் தெரிவித்தார்.

அறிவியல் ஆராய்ச்சியை மேம்படுத்துவதற்கான வலுவான கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

கிராமப்புறங்கள் மற்றும் தொலைதூரப் பகுதிகளில் உள்ள மக்கள் பயன்பெறும் வகையில், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட நடமாடும் மருந்தகங்களை உருவாக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் புதிய கண்டுபிடிப்புகள் முக்கிய பங்கு வகிப்பதாகவும் டாக்டர் ஜிதேந்திர சிங் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>

வடகிழக்கு பருவமழை காலத்தில் மின் விநியோகத்தை சீராக பராமரிப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

அரியலூர் மாவட்டம் செந்துறையில் குளிர்சாதன பேருந்து சேவையை தொடங்கிவைத்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மின் கம்பங்கள் சாய்ந்தால் உடனடியாக மாற்று மின் கம்பங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

*(Voice Byte – சிவசங்கர் - 21 Sec.)*

தீபாவளி பண்டிகையையொட்டி கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு முன்பதிவு செய்து பயணம் செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக திரு சிவசங்கர் தெரிவித்தார்.

அரசு போக்குவரத்துக்கழகங்களின் 760 பேருந்துகள் கடந்த வியாழக்கிழமையன்று இயக்கப்பட்டதாக அவர் கூறினார்.

தினமும் ஒரு லட்சத்து 28 ஆயிரம் பேர் சென்னையிலிருந்து மாநிலத்தின் மற்றப்பகுதிகளுக்கு சென்றுள்ளதாக அவர் கூறினார்.

பண்டிகை காலத்தில் ஆம்னி பேருந்துகளின் உரிமையாளர்கள் பயணிகளிடமிருந்து கூடுதல் கட்டணம் வசூலிக்கக்கூடாது என உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் திரு சிவசங்கர் தெரிவித்தார்.

<<<<<<>>>>

சென்னை நகரில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக குத்தம்பாக்கத்தில் கட்டப்பட்டுவரும் பேருந்து முனையத்தின் கட்டுமானப்பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளதாக மாநில அமைச்சரும், சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுத்தின் தலைவருமான திரு சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

சென்னை பெரம்பூரில் இன்று பல்நோக்கு குழந்தைகள் மைய கட்டிடத்தினை திறந்துவைத்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாமல்லபுரம் மற்றும் செங்கல்பட்டில் பேருந்து நிலைய கட்டுமானப்பணிகள் முழுவீச்சல் நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

சென்னையில் அம்பத்தூர், முல்லை நகர், உதயசூரியன் நகர் ஆகிய மூன்று இடங்களில் கட்டப்பட்டுவரும் பேருந்து நிலையங்களின்

கட்டுமானப்பணிகள் இம்மாத இறுதிக்குள் முடிவடையும் என்றும் திரு சேகர்பாபு தெரிவித்தார்.

<<<<<<>>>>>

நாகை மாவட்டத்தில் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யும் பணியை மாநில அரசு போர்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், நெல் கொள்முதல் செய்யும் பணியை மாநில அரசு 10 நாட்களுக்கு மேல் காலம் தாழ்த்தியுள்ளதால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

மாவட்டம் முழுவதிலும் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் 15 ஆயிரம் நெல் மூட்டைகளுக்கு மேல் தேங்கியிருப்பதால் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்வதில் தாமதம் ஏற்படுவதாக மாநில அரசு அதிகாரிகள் கூறியிருப்பது ஏற்புடையது அல்ல என்றும் தெரிவித்துள்ளார்.

பருவமழை மற்றும் தீபாவளி பண்டிகை காலத்தையொட்டி முன்கூட்டியே திட்டமிட்டு, நெல் கொள்முதல் செய்யம் பணியை மாநில அரசு துரிதமாக மேற்கொண்டிருக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

முறையான திட்டமிடல் இல்லாததால், அறுவடை செய்த நெல் மணிகள் மழையில் நனைவதாகவும், இது மாநில அரசின் அலட்சியப்

போக்கையோ காட்டுவதாகவும் திரு நயினார் நாகேந்திரன் குறை கூறியுள்ளார்.

<<<<<<>>>>

நீலகிரி மற்றும் கோவை மாவட்ட மலைப்பகுதிகளில் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

(Voice Byte – செந்தாமரை கண்ணன் (1) – 44 Sec. )

<<<<<<>>>>

மாவட்டச் செய்திகள்

தூத்துக்குடி மாவட்டத்தில் குற்றச்செயல்களை தடுப்பதற்காக நவீன கேமராக்களுடன் கூடிய காவல் கண்காணிப்பு மையத்தை மாநில அமைச்சர் திருமதி கீதா ஜீவன் இன்று திறந்துவைத்தார்.

------------

நாமக்கல் மாவட்டம் எர்ணாபுரத்தில் நடைபெற்ற மருத்துவ முகாமினை, ஆட்சியர் திருமதி துர்காமூர்த்தி ஆய்வு செய்தார்.

--------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் விபத்து மற்றும் மாசற்ற தீபாவளியை பொதுமக்கள் கொண்டாட வேண்டும் என்று ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

------------

*திண்டுக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இன்று முதல் 24 மணிநேரமும் செயல்படும் சிறப்பு தீக்காய பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.*

------------

*தீபாவளி பண்டிகையை ஒட்டி சென்னையில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு செல்லும் வாகனங்களால் விக்கிரவாண்டி சுங்கச்சாவடியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டு வாகனங்கள் நீண்ட நேரம் காத்திருந்து செல்கின்றன*

----------

*தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளியில் நடைபெற்ற சிறப்பு வாரச்சந்தையில் மூன்று கோடி ரூபாய் மதிப்பிலான ஆடுகள் விற்பனையாயின.*

---------

*தேனி மாவட்டம் தேவாரம் அருகே கோழி பண்ணைக்குள் வெள்ள நீர் புகுந்ததால் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட கோழிகள் உயிரிழந்தன*

--------

*கன்னியாகுமரி மாவட்டம் குளித்துறை தாமிரபரணி ஆற்றில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு காரணமாக சப்பாத்து பாலத்தில் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது.*

------------

*தேனி மாவட்டம் மேகமலை அருவியில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.*

-----------------

மகாவீர் துறவரம் பூண்ட தினத்தை முன்னிட்டு வரும் செவ்வாய்கிழமை சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட இடங்களில் உள்ள நான்கு இறைச்சிக்கூடங்கள் மூடப்படுவதாக சென்னை மாநகராட்சி அறிவித்துள்ளது. இதேபோல், ஜெயின் கோவில்கள் அமைந்துள்ள பகுதிகளில் 100 மீட்டர் சுற்றளவில் உள்ள அனைத்து இறைச்சிக்கடைகளும் மூடப்பட வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய துடுப்புப்படகு சாம்பியன் போட்டியில் இந்தியா 2 தங்கம், 2 வெள்ளிப் பதக்கங்களை வென்றது.

வியட்நாமில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் மற்றும் நான்கு பேர் கொண்ட குழு பிரிவில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

மற்றொரு எட்டு பேர் அடங்கிய ஆடவர் குழு பிரிவிலும், மகளிர் இரட்டையர் பிரிவிலும் இந்தியா வெள்ளிப்பதக்கத்தை வென்றது.

-------------

மலேசியாவில் நடைபெற்று வரும் ஜோஹர் கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா – ஆஸ்திரேலியா இடையேயான இறுதியாட்டம் தற்போது நடைபெற்றுவருகிறது.

------------

கொழும்பில் நடைபெற்றுவரும் ரக்பி-7 போட்டியில் இந்தியா மகளிர் பிரிவில் 50-0 என்ற புள்ளிக்கணக்கில் இந்தோனேஷியாவை வென்றது.

<<<<<<END>>>>